DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 98 /2019

Deposition of Witness : DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சந்திரா | Father's/Husband's Name : | ரெங்கராஜன் |
| Village | : திம்மரசநாயக்கனூர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2025

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை எனது கணவர் கடந்த 05.10.1978 ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 லக்க சொத்துக்கள் உள்ளதா என்றால் சரிதான். படப்படி, குப்பையடி, வீட்டடியாக 3 சொத்துக்கள் உள்ளது. மேற்படி 3 லக்க சொத்துக்களையும் சேர்த்து மொத்தம் 1901 சதுரடி எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். எனது கணவர் கிரையம் பெற்ற சொத்தின் பழைய சர்வே எண்.778/1 என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் எனக்கு தெரியும். மேற்படி பழைய சர்வே எண்.778/1 பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதில் எனது சொத்தின் புதிய நத்தம் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1 வது சொத்தாக குறிப்பிட்டுள்ள இடத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான்.

2) மேற்படி இடத்திற்கு புதிய நத்தம் சர்வே எண்.2555/30 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது லக்க சொத்திற்கு வடக்கு பக்கம் வாசி ஆசாரி வீடு கட்டி குடியிருந்து வந்து தற்போது காலியிடமாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வாசி ஆசாரி இடத்திற்கு வடக்கு பக்கம் தான் இந்த வழக்கு சொத்து இருக்கிறது என்றால் சரியல்ல. நான் தற்போது வீடு கட்டி குடியிருந்து வரும் இடத்திற்கு மேற்கு பக்கம் இடத்தில் எனக்கு பாத்தியம் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. 2 வது லக்க சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சர்வே எண்.2555/7 ல் கட்டுப்பட்ட 5 செண்ட் நிலத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல, பாத்தியம் இருக்கிறது. சர்வே எண்.2555/44 ல் 748 சதுரடி இடம் மட்டும் தான் எனக்கு பாத்தியம்

என்றாலும் நான் பொது சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3) முன் பக்கமும் எனக்கு இடம் இருக்கிறது. சர்வே எண்.2566/7 ல் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை. என் சொத்திற்கும் இந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி 3 வது லக்க சொத்தாக கிரையம் வாங்கிய சொத்து நத்தம் சர்வே எண்.2555/34 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 வது அயிட்ட சொத்திற்கு வடக்கு பக்கம் தொட்டியநாயக்கர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் எனது நாத்தானர் அந்த இடத்தை வாங்கியிருக்கிறார். எனது கணவர் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் வாங்கிய சொத்துக்களுக்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் அது வெவ்வேறு சொத்து என்றாலும் சரியல்ல.

4) எனது வீட்டிற்கு மேல்பக்கம் சர்வே எண்.2555/2 ல் கட்டுப்பட்ட பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்தால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மேல்பக்கம் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள இடம் இல்லை. பி.வா.சா.ஆ.1 ல் கட்டுப்பட்ட 2 வது லக்க சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சர்வே எண்.2566/7 ல் கட்டுப்பட்ட பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய எத்தனித்தால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட 2 வது லக்க சொத்திற்கு தெற்கு பக்கம் வீதி உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெரு மெயின் வீதி வரை செல்கிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்திற்காக தான் இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.88/2004 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

5) மேற்படி வழக்கு எனது சாதகமாக தீர்ப்பாகி மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்த வரை எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றாலும் பொது மக்கள் பயன்பாட்டில் இருக்கும் சொத்தை எனது சொத்து என்றும் பொய்யாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் ஊர் மக்களின் பொது பயன்பாட்டிற்காக கொடுக்கப்பட்ட இடம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஊர் மக்கள் சார்பாக குப்பை தொட்டிகள் வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு

மேற்கு பக்கம் பள்ளிக்கூடம் இருக்கிறது என்றால் சரியல்ல, தெற்கு பக்கத்தில் துாரத்தில் இருக்கிறது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு மேற்கு பக்கமும், 2 வது லக்க சொத்திற்கு தெற்கு பக்கமும் உள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று பொது அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த பாத்தியம் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 28.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.28 17:48:36 +0530

District Munsif,
Aundipatti.